**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.SC.No.53/2023**

Prosecution Witness : **LW - 9 / PW - 11**

Name : குணசேகரன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **17.02.2026**

(1, 2, 4, 6 எதிரிகள் ஆஜர். 3, 5 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் வாளரகுறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 அன்பரசன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அவர் SC வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்ததா என்றால் பிரச்சனை யாருக்கும் நடக்கவில்லை. ஒருநாள் வெடி வெடித்ததில் பிரச்சனை நடந்ததாக சொன்னார்கள். அது சம்மந்தமாக அன்பரசன், தங்கராசு என்னை அழைத்து, நேற்று நடந்த பிரச்சனை சம்மந்தமாக ஊர்க்காரர்களிடம் பேச வேண்டும் என்று சொன்னார்கள். நானும் போனேன். நானும், அன்பரசன், தங்கராசு ஆகியோர்களும் கண்ணன் வீட்டிற்கு சென்றோம். அப்போது கண்ணன் எங்களிடம் இங்கு எதுவும் பேச முடியாது, போலீஸ் கேஸ் ஆனதால் ஸ்டேசனில் பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி விட்டார். எனவே மறுநாள் கண்ணன் இரும்புலிகுறிச்சி காவல் நிலையத்திற்கு வரும்படி எங்களை அழைத்தார். நான், தங்கராசு, அன்பரசன் ஆகியோர் சென்றோம். போலீசார் எங்களிடம் நீங்கள் சமாதானமாக பேசிக்கொண்டால் ஸ்டேசனுக்கு வெளியே போய் பேசி கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் வெளியே போய் சமாதானமாக பேசிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் நான் காவல்

நிலையத்திற்கு போனபோது தான் விசாரித்தார்கள், அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 11.07.2023 அன்று மாலை 05.00 மணிக்கு வன்னியர் சமுதாயத்தை சேர்ந்த முக்கியஸ்தர்களை பார்ப்பதற்காக எங்கள் ஊர் ஏரிக்கரை அருகே பஸ்டாப் அருகே பெரியசாமி மகன் கண்ணன் நின்று கொண்டிருந்தார் என்றும், அருகில் உள்ள செல்வராசு டீக்கடைக்கு எதிரே எங்கள் ஊரை சேர்ந்த ரெங்கநாதன் மகன் குமாரும், சேகர் மகன் பிரகாஷிம் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது குடிபோதையில் இருந்த அன்பரசன் தம்பி திருநாவுகரசு சிகரெட் வாங்கி பற்ற வைத்து கொண்டு வந்தார் என்றும், கண்ணனை பார்த்தவுடன் அன்பரசனை திட்டியவர்களை பொத்தாம் பொதுவாக ஊரில் உள்ளவர்களை திட்டினார் என்றும், அப்போது நானும், தவசமணியும் சேர்ந்து, திருநாவுகரசை கண்டித்து அனுப்பி வைத்தோம் என்றும், இது சம்மந்தமாக சாதி கலவரம் ஏற்பட்டுவிடும் என்று கருதிய நாங்கள், இருதரப்பையும் பேசவேண்டும் என்று கருதி 12.07.2023 அன்று காவல் நிலையம் சென்றோம் என்றும், இரவு 07.00 மணியளவில் காவல்நிலையத்தில் சுமார் ¼ கி.மீ க்கு முன்னால் எங்கள் ஊரை சார்ந்த வன்னியர் இனத்தை சார்ந்த பெரியசாமி மகன் கண்ணன், சாமிநாதன் மகன் ராமச்சந்திரன், செல்வராசு மகன் ராஜேஷ், ராமலிங்கம் மகன் ரமேஷ், சேட்டு மகன் அருண், கூத்தன் மகன் வேலுசாமி ஆகியோர் சேர்ந்து கொண்டு, அசிங்கமாக திட்டியதாகவும், காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இல்லை என்றால் உயிரோடு விடமுடியாது என்று மிரடினார்கள் என்றும், அப்போது நானும், என்னோடு இளங்கோவன், சுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் அமைதியாக இருக்கும்படி சொன்னோம் என்றும், அவர்கள் எதையும் கேட்காததால் வேறு வழி இன்றி அவர்களின் மிரட்டலுக்கு பயந்து திருநாவுகரசு கீழே விழுந்து கும்பிட்டார் என்றும், இது நேரடியாக எனக்கு தெரியும் என்றும் போலீசார் விசாரணையில்

சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை</u>**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.SC.No.53/2023** |
| Prosecution Witness : | **LW - 11 / PW - 12** |
| Name : பாலமுருகன் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day <u>17.02.2026</u>

(1, 2, 4, 6 எதிரிகள் ஆஜர். 3, 5 எதிரிகளுக்காக குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாளரகுறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 அன்பரசன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அவர் SC வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்ததா என்றால் பிரச்சனை யாருக்கும் நடக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 11.07.2023 அன்று மாலை 05.00 மணிக்கு வன்னியர் சமுதாயத்தை சேர்ந்த முக்கியஸ்தர்களை பார்ப்பதற்காக எங்கள் ஊர் ஏரிக்கரை அருகே பஸ்டாப் அருகே பெரியசாமி மகன் கண்ணன் நின்று கொண்டிருந்தார் என்றும், அருகில் உள்ள செல்வராசு டீக்கடைக்கு எதிரே எங்கள் ஊரை சேர்ந்த ரெங்கநாதன் மகன் குமாரும், சேகர் மகன் பிரகாஷிம் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது குடிபோதையில் இருந்த அன்பரசன் தம்பி திருநாவுகரசு சிகரெட் வாங்கி பற்ற வைத்து கொண்டு வந்தார் என்றும், கண்ணனை

பார்த்தவுடன் அன்பரசனை திட்டியவர்களை பொத்தாம் பொதுவாக ஊரில் உள்ளவர்களை திட்டினார் என்றும், அப்போது குணசேகரனும், தவசமணியும் சேர்ந்து, திருநாவுகரசை கண்டித்து அனுப்பி வைத்தார்கள் என்றும், இது சம்மந்தமாக சாதி கலவரம் ஏற்பட்டுவிடும் என்று கருதிய அவர்கள், இருதரப்பையும் பேசவேண்டும் என்று கருதி 12.07.2023 அன்று காவல் நிலையம் சென்றார்கள் என்றும், இரவு 07.00 மணியளவில் காவல்நிலையத்தில் சுமார் ¼ கி.மீ க்கு முன்னால் எங்கள் ஊரை சார்ந்த வன்னியர் இனத்தை சார்ந்த பெரியசாமி மகன் கண்ணன், சாமிநாதன் மகன் ராமச்சந்திரன், செல்வராசு மகன் ராஜேஷ், ராமலிங்கம் மகன் ரமேஷ், சேட்டு மகன் அருண், கூத்தன் மகன் வேலுசாமி ஆகியோர் சேர்ந்து கொண்டு, அசிங்கமாக திட்டியதாகவும், காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், இல்லை என்றால் உயிரோடு விடமுடியாது என்று மிரடினார்கள் என்றும், அப்போது குணசேகரனும், இளங்கோவன், சுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் அமைதியாக இருக்கும்படி சொன்னார்கள் என்றும், அவர்கள் எதையும் கேட்காததால் வேறு வழி இன்றி அவர்களின் மிரட்டலுக்கு பயந்து திருநாவுகரசு கீழே விழுந்து கும்பிட்டார் என்றும் நான் கேள்விபட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை</u>

<u>மறு விசாரணை–</u>இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.